செ.வெ.எண்: 539 நாள்: 30.8.2020

**காய்ச்சல் அறிகுறி இருந்தால் பொதுமக்கள் உடனடியாக அருகில் உள்ள அரசு மருத்துவமனையினை அணுக வேண்டும்.**

**காய்ச்சல் அறிகுறிகள் ஏற்பட்டால் பொதுமக்கள் சுயமாக மருந்து மாத்திரைகளை உட்கொள்ள கூடாது.**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நடத்தப்படும் மருத்துவ முகாம்களில் நாள் ஒன்றுக்கு 4,000 நபர்களுக்கு காய்ச்சல் கண்டறியும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகிறது.**

**மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்**

---

காய்ச்சல் அறிகுறி இருந்தால் பொதுமக்கள் உடனடியாக அருகில் உள்ள அரசு மருத்துவமனையினை அணுக வேண்டும். இதுகுறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க நோய் தடுப்பு நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. புதுக்கோட்டை மாவட்டத்தில் நோய் தொற்றில் இருந்து பொதுமக்களை பாதுகாக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்த வகையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் இதுவரை 6,934 காய்ச்சல் கண்டறியும் முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. இதில் நாள்தோறும் 3,900 முதல் 4,000 நபர்களுக்கு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, அதில் கோவிட் அறிகுறிகள் தென்படும்பட்சத்தில் அவர்களுக்கு உடனடியாக கோவிட் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம் நோய் தொற்று உடையவர்களை கண்டறிந்து மற்றவர்களுக்கு நோய் தொற்று

பரவாமல் உடனடி சிகிச்சை அளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் பயனாக இனிவரும் நாட்களில் நோய் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை படிப்படியாக குறைய வாய்ப்பாக அமையும்.

**குறிப்பாக நோய் அறிகுறியுடன் காலம் தாழ்த்தி வரும் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பது மட்டுமே மருத்துவர்களுக்கு சவாலாக உள்ளது என்பதை கருத்தில் கொண்டு காய்ச்சல் அறிகுறி உள்ளவர்கள் சுயமாக மருந்துமாத்திரைகள் எடுத்துக்கொள்ளாமல் உடனடியாக அருகில் உள்ள அரசு மருத்துவமனைக்கு சென்று பரிசோதனை செய்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.**

அதேபோன்று தங்கள் பகுதிகளில் நடைபெறும் காய்ச்சல் கண்டறியும் முகாம்கள் குறித்து முன்னதாகவே நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தின் மூலம் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது. எனவே இம்முகாம்களை பொதுமக்கள் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

கொரோனா நோய் தொற்று பரவலை கட்டுப்படுத்துவதற்கு முகக்கவசம் மற்றும் சமூகஇடைவெளியை பின்பற்றுவது மிக அவசியமான ஒன்றாகும். அதேபோன்று கொரோனா நோய்தொற்றை கட்டுப்படுத்தும் வகையில் அரசு கூறும் வழிமுறைகளை பொதுமக்கள் தவறாது பின்பற்றி நோய் தொற்றில் இருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது. இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**